# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1972/37 - 2016 ජුනි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.06.23

*1972/37 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

மினிப்பே பிரதேச சபை

**களியாட்ட வரிகள் விதித்தல்**

(267 ஆவது அத்தியாயமான) களியாட்ட வரிகள் கட்டளைச் சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, மினிப்பே பிரதேச சபை மூலம் நிறைவேற்றப்பட்ட பின்வரும் முன்மொழிவு, குறித்த பிரிவின் (2) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாணத்தின் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதென குறித்த உப பிரிவுக்கமைய இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது.

பீ. பி. விஜயரத்ன,
செயலாளர்,
முதலமைச்சு, கல்வி மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
மத்திய மாகாணம்.

பல்லேகல,
*2016, யூன் 04.*

முன்மொழிவு

களியாட்ட வரிகள் கட்டளைச் சட்டத்தில் விபரிக்கப்பட்டுள்ள ஏதேனும் களியாட்ட விவகாரத்துக்கென உட்செல்வதற்குரிய செலுத்துகையின் (களியாட்ட வரி தவிர்ந்த) நூற்றுக்குப் பத்து (10%) வீதத்துக்குச் சமமான வரியொன்றை விதித்து அறவிடுதல் வேண்டுமெனவும், இந்த முன்மொழிவு நிறைவேற்றம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மாதத்தைத் தொடர்ந்து வரும் மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து செயற்படுதல் வேண்டுமெனவும் முன்மொழிகின்றது.

இந்த முன்மொழிவு நிறைவேற்றம் செயற்படுத்தப்படும் முதல் இரண்டு வருடங்களுக்குள் திரைப்படம் ஒன்றைக் கண்டு களிப்பதற்கெனச் செலுத்தப்படும் கட்டணத்தின் மீது அறவிடப்படவேண்டிய வரித்தொகை, அவ்வாறு செலுத்தப்படும் கட்டணத்தின் நூற்றுக்கு ஏழு தசம் ஐந்து (7.5%) வீதமாக இருத்தல் வேண்டும்.

*7 - 406*



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.